ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
மாநில திட்ட இயக்ககம், சென்னை–600 006
மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள்
ந.க.எண் : 680 /அ1 / ஒபக / 2019, நாள்:09.09.2019

பொருள்: மகாத்மா காந்தி அடிகளின் 150 – வது பிறந்த நாள் நினைவு விழாவினை சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு அனைத்துப் பள்ளிகளிலும் காந்தி அடிகளின் வாழ்க்கை மற்றும் காந்திய மதிப்புகளை மையமாக வைத்து செயல்பாடுகள் செய்திடல் – மாவட்டங்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை: D.O.Letter No:F.No.1-23/2018-15.5, GOI, MHRD, DSE & L. Dated: 30.07.2019

**********

பார்வையில் காணும் பொருளுக்கிணங்க நாடு முழுவதும் மகாத்மா காந்தி அடிகள் அவர்களது 150 –வது பிறந்த நாள் நினைவு விழாவானது 2.10.2018 முதல் 02.10.2020 முடிய 2 வருடங்களுக்கு கொண்டாடப்பட்டு வருவதால், இதனை சீரிய முறையில் செயல்படுத்திட மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையானது கீழ்க்கண்டவாறு வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.

மகாத்மா காந்தி அடிகளின் 150 ஆவது பிறந்தநாள் நினைவு விழாவினை சிறப்பான முறையில் கொண்டாடும் பொருட்டு 23.09.2019 முதல் 02.10.2019 முடிய தொடர்ச்சியாக 9 நாட்கள் காந்திய மதிப்புகள் சார்ந்து கீழே அட்டவணை–Iஇல் குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து விதமான செயல்பாடுகளையும் மேற்கொள்ளவும் மற்றும் இச்செயல்பாடுகளானது 02.10.2020 முடிய பள்ளி அளவில் நடத்திட அறிவுறுத்தப்படுகிறது.

அட்டவணை - I

**23.09.2019 முதல் 2.10.2019 முடிய காந்திய மதிப்புகளை மையமாகக் கொண்டு அனைத்துப் பள்ளிகளிலும் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள்:**

| வ.எண் | தேதி | செயல்பாடுகள் |
|---|---|---|
| 1. | 23.09.2019 (திங்கள்) | சர்வ மத பிரார்த்தனை, காந்திய மதிப்புகளை மையமாகக் கொண்டு பெற்றோர்களை இச்செயல்பாடுகளில் ஈடுபடுத்துதல். |
| 2. | 24.09.2019 (செவ்வாய்) | காந்திய மதிப்புகளை மையமாகக் கொண்டு பாட்டு, நாடகம், மாறுவேடப் போட்டி, ஓரங்கநாடகம். |
| 3. | 25.09.2019 (புதன்) | தூய்மை விழிப்புணர்வு பேரணி (காந்திய வலம்), தூய்மைப் பணி, சமூக சேவை. |

| | | |
|---|---|---|
| 4. | 26.09.2019 (வியாழன்) | பேச்சுப் போட்டிகள், பட்டி மன்றம், சொற்பொழிவு, காந்தி பற்றிய கதைகள் கூறுதல், காந்திபடிகள் குறித்து கலந்துரையாடுதல், மாணவர்கள், தாங்கள் காந்தி குறித்து படித்தப் புத்தகங்களில், கூறப்பட்டுள்ள மதிப்புகளை தனது வாழ்வில் கடைபிடித்தமை பற்றிய அனுபவத்தைப் பகிர்தல். |
| 5. | 27.09.2019 (வெள்ளி) | கவிதை, கட்டுரை, அறைகூவல் (Slogan), நாடகம் மற்றும் சுய குறிப்பு எழுத செய்தல். |
| 6. | 28.09.2019 (சனி) | வரைதல் மற்றும் வண்ணம் தீட்டுதல். |
| 7. | 30.09.2019 (திங்கள்) | காந்தியோடு தொடர்புடைய இடங்கள் மற்றும் அருங்காட்சியகம் செல்லுதல் மற்றும் காந்தி பற்றிய குறும்படம் திரையிடல். |
| 8. | 01.10.2019 (செவ்வாய்) | மாணவர்கள், பெற்றோர்களுக்கு வினாடி வினா போட்டி, விழாக்கள் நடத்துதல், மாணவர்கள் வரைந்த ஓவியங்களை காட்சி படுத்துதல். காந்தி அடிகள் வாழ்க்கை நிகழ்வினை கண்காட்சிப் படுத்துதல், காந்தி அடிகள் பற்றிய புத்தகக் கண்காட்சி, கட்டுரை கருத்துகள் பகிர்ந்து கொள்ளல். |
| 9. | 02.10.2019 (புதன்) | காந்தி ஜெயந்தி விழா - காந்தியின் வாழ்க்கை குறித்து மாணவர்களைக் கொண்டு கலை மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகள் பள்ளிகளில் நடத்துதல். |

அட்டவணை - II

அக்டோபர் 2020 வரை வருடம் முழுவதும் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள்:

| வ.எண் | செயல்பாடுகள் | கால வரையறை | மாநிலத் திட்ட இயக்ககத்திற்கு மாதம் தோறும் அனுப்ப வேண்டிய அறிக்கை |
|---|---|---|---|
| 1 | I-V வகுப்பு மாணவர்களுக்கு நல்லொழுக்கப் பண்புகளை உண்மை, அஹிம்சை, சேவை, இவற்றை தாய் மொழியில் கற்பித்தல், 6–12 வகுப்பு மாணவர்களுக்கு இன்றைய சூழலில் காந்திய மதிப்புகளின் தொடர்பு பற்றி கூறுதல். | ஜூலை – அக்டோபர் 2019 | செயல்பாடுகளில் கூறப்பட்டுள்ள பண்புகளில் பட்டிமன்றம், கட்டுரை மற்றும் ஓவியம் வரைதல் போன்றவை பள்ளிஅளவில் நடத்தப்பட்டு அவை சார்ந்த விளக்கமான தொகுப்பறிக்கையினை (ஆங்கிலத்தில்) மாநிலத் திட்ட இயக்ககத்திற்கு அனுப்புதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 2 | தொடர்ச்சியாக 9 நாட்களுக்கு மேற்கண்ட முதல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மகாத்மா காந்தி குறித்த செயல்பாடுகள் மாணவர்கள் செய்வதன் மூலம் காந்திய மதிப்புகளை அறியச் செய்தல். | 23.09.2019 முதல் 01.10.2019 | மேற்கண்ட முதல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மகாத்மா காந்தி குறித்த செயல்பாடுகள் பள்ளிஅளவில் செய்து அதன் அறிக்கையினை (ஆங்கிலத்தில்) சமர்ப்பித்தல் வேண்டும். |
| 3 | காந்தியின் வாழ்க்கை குறித்து மாணவர்களைக் கொண்டு கலை மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்துதல் | 02.10.2019 | காந்தியின் வாழ்க்கை குறித்து மாணவர்களைக் கொண்டு கலை மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளின் தொகுப்பறிக்கையினை (ஆங்கிலத்தில்) அனுப்புதல் வேண்டும். |
| 4 | பள்ளி சுற்று வட்டாரப் பகுதிகளில் விழிப்புணர்வு பேரணி நடத்துதல் | நவம்பர் 2019 | செயல்பாடுகளின் தொகுப்பறிக்கை |
| 5 | வாய்மை, அஹிம்சை முதலிய தலைப்புகளில் ஆசிரியர்கள் மற்றும் கருத்தாளர்களை கொண்டு பள்ளி காலை இறைவணக்கக் கூட்டத்தில் உரையாற்றச் செய்தல். | டிசம்பர் 2019 | செயல்பாடுகளின் தொகுப்பறிக்கை |
| 6 | காந்திஜி குறித்து வினாடி வினா போட்டிகள் பள்ளிகளில் நடத்துதல் | ஜனவரி – பிப்ரவரி 2020 | தொகுப்பறிக்கை சமர்ப்பித்தல் |
| 7 | கட்டுரை மற்றும் ஓவியம் வரைதல் பணிமனை பள்ளியில் நடத்துதல் | ஜூலை – அக்டோபர் 2020 | செயல்பாடுகளின் தொகுப்பறிக்கை |
| 8 | மகாத்மா காந்தியடிகள் 150-வது பிறந்தநாள் ஜெயந்தியை பள்ளி அளவில் காந்திய மதிப்புகளில் கலை பண்பாட்டு நிகழ்ச்சிகளாக நடத்துதல். | 02.10.2020 | செயல்பாடுகளின் தொகுப்பறிக்கை. |

மேற்கண்ட இரண்டு கால அட்டவணைகளின்படி, அனைத்து தொடக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகளிலும் செயல்பாடுகளானது காந்திய மதிப்புகளை மட்டுமே மையமாகக் கொண்டு அமைதல் வேண்டும்.

மாவட்டத்தில் அனைத்து பள்ளிகளிலும் நடைபெறும் செயல்பாடுகளை மாத வாரியாக இணைப்பில் கண்ட படிவத்திலும் மற்றும் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தொகுப்பறிக்கையாகவும் மாநிலத் திட்ட இயக்ககத்திற்கு தவறாது அனுப்புதல் வேண்டும்.

செயல்பாடுகள் குறித்த புகைப்படங்கள் மற்றும் காணொளி காட்சிகள் (videos) இவற்றினை https://www.gandhi.gov.in (Karyanjali) என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்து அதனுடைய links அனைத்தையும் மாநிலத் திட்ட இயக்ககத்திற்கு அனுப்புதல் வேண்டும். மாதந்தோறும் நடைபெறும் செயல்பாடுகள் குறித்த புகைப்படங்கள் மற்றும் காணொளி காட்சிகள் (videos) பதிவுகளை இணைக்கப்பட்டுள்ள Report Format-இல் கேட்டுள்ளவாறு மாதந்தோறும் அனுப்புதல் வேண்டும்.

மேலும் இப்பொறுப்பினை ஏற்றுச் செயலாற்றும் ஒருங்கிணைப்பாளர் விவரத்தினை கீழ்காணும் படிவத்தில் பூர்த்தி செய்து (11.09.2019-க்குள்) rmsatnkalautsav@gmailcom என்ற e-mail முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

| மாவட்டம் | ஒருங்கிணைப்பாளர் பெயர் | e-mail | கைப்பேசி எண் |
|---|---|---|---|
| | | | |

மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் மேற்கண்ட அனைத்து செயல்பாடுகளையும் மாவட்டங்களில் சிறப்பாக செயல்படுத்துதல் வேண்டும்.

மாநில திட்ட இயக்குநர்

For
9.9.19

பெறுநர்
அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள்.